தென்காசி வடக்கு மாவட்டம் – குருவிகுளம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# முதல்வர் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் துரைமுருகன் – ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரை! ஈ.ராஜா – மு.அப்துல்வகாப் பங்கேற்பு!

தென்காசி.ஏப்.8

தென்காசி வடக்கு மாவட்டம் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டம் இளையரசனேந்தலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினார்.

தென்காசி வடக்கு மாவட்டம் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டம் ஆகிய முப்பெரும் விழா நிகழ்வு இளையரசனேந்தல்

நக்கலமுத்தன்பட்டி கலைஞர் திடலில் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் பி.குணசேகரன் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் வரவேற்புரை யாற்றினார். இந்நிகழ்வில் கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசியதாவது.

### அழைத்தது ராஜா அல்லவா?

இந்தப் பகுதியில் நண்பர் கோபால்சாமியுடன் பேசியது நினைவிருக்கிறது. இந்தப் பகுதியின் அருகில் உள்ள குருவிகுளம், திருவேங்கடம், கரிவலம்வந்த நல்லூர் என்று எல்லா ஊர்களிலும் ஒரு காலத்தில் நண்பர் கோபால்சாமியுடன்

சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். இந்த ஊர்கள் எல்லாம் எனக்குத் தெரியும். பழக்க வழக்கங்கள் தெரியும். அப்படிப்பட்ட நிலையில் ஒரு பெரிய பொதுக் கூட்டத்திற்கு நான் வர வேண்டும் என்பதற்காக பொதுக்கூட்டம் அல்ல, பல கட்சிகளுக்கு இதுதான் தேசிய மாநாடு

ஆகும். அந்த அளவுக்கு இந்த கூட்டத்தை கூட்டி வரவேற்று இருக்கிற ராஜா அவர்களுக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ராஜா சட்டமன்ற உறுப்பினர் சபையிலே மிக எளியவர். உருவத்திலும் சரி, செயலிலும் சரி. தலைவரிடத்தில் நல்ல பெயர் வாங்கி இருக்கிறவர். என் நண்பர் எனக்கு வேண்டியவர். எனவே அப்படிப்பட்ட ஒரு நண்பருடைய அழைப்பை ஏற்று வந்திருக்கிறேன். சளியும், இருமலும் கூடிய வியாதி சென்னை மாநகரத்தில் பரவுகிறது. அதனால் மூன்று மாத காலம் எங்கும் போகாமல் சட்டமன்றத்திற்கு போனால் கூட ஓரிரு வார்த்தைகளை பேசிவிட்டு இருந்த என்னை இந்த பொதுக் கூட்டத்திற்கு அழைத்து இருக்கிறார். வேறு யார் அழைத்திருந் தாலும் வந்திருக்க மாட்டேன். அழைத்தது ராஜாவல்லவா. போகாமல் இருக்க முடியாது. மலரும் நினைவுகளுடன் இந்த மேடையில் உங்களை சந்தித்திருக் கிறேன். தம்பி ஜெகத்ரட்சகன் அவர்கள் தளபதியுடைய பெருமைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார். தளபதியுடைய பெருமையை எடுத்துச் சொன்னால் இயக்கத்தின் பெருமையை, கட்சியின் பெருமையை எடுத்துச் சொல்கிறோம் என்பது பொருள். மத்தியிலே ஒரு ஆட்சி தேர்

தெடுக்கப்பட்ட ஆட்சி தான். மோடி பிரதமர். அவருக்கு பக்கத்திலேயே பல மந்திரிகள். அவர்களுக்கு என்ன வேலை திட்டம் போட வேண்டும். பணம் இருந்தால் தர வேண்டும். நாட்டிலே சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும். மக்களுக்கு வேண்டிய திட்டங்களை தர வேண்டும். ஆனால் அதை எல்லாம் விட்டு விட்டு வேறு பணியிலே ஈடுபடுகிறார்கள். ஒவ்வொரு மாநிலமும் அவர்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு சலாம் சொல்லுகிறவன் முதலமைச்சராக இருக்க வேண்டும். சொல்லாதவனை தூக்கி எறிய வேண்டும்.

### நாங்கள் பெற்ற நாகரீகம்!

இந்த நாட்டில் இரண்டு கலாச்சாரங்கள் இருக்கின்றன ஒன்று வடநாட்டில் இருக்கின்ற கலாச்சாரம் அது நமக்கு அசிங்கமான ஒன்று. ஆனால் நாம் எப்படிப்பட்டவர்கள் பண்பாடு மிக்கவர்கள் ஆனால் பாராளுமன்றத்தில் ஒரு மந்திரி செல்கிறார் நம்மை பார்த்து நாகரிகமற்றவர்கள் என்று சொல்கிறார். நான் அவர்களுக்கு சொல்கிறேன். கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி என்று சொல்வார்கள் எங்களுடைய மன்னர்கள் இந்திய இமயத்திலே கொடி நாட்டி இருக்கிறார்கள்.

ஒருமுறை கங்கை வரை ராஜேந்திரசோழன் படையெடுத்து போனான். கங்கைகொண்டான் என்று பெயர் பெற்றான் அதனால் கங்கைகொண்டபுரம் என்ற ஒரு தலைநகரையே உருவாக்கினான்.

அப்படி ஒரு தமிழ் மறவன் வடநாடு சென்ற போது அங்கே கனகவதி என்ற மன்னன் சொன்னர்கள். எம் போல் மன்னர் இங்கில்லை போலும். அந்த நேரத்தில் எங்கள் துணையான அமைச்சர்கள் இங்கே இல்லை என்று சொன்னவுடன் செங்குட்டுவன் படையெடுத்து சென்று அந்த கனகவதி விஜயனை வெற்றியை கண்டு அவன் தலை மீது கங்கையிலே ஒரு பாறை எடுத்து அதை இங்கே கொண்டு வந்தவன். இது நாங்கள் பெற்ற நாகரீகம்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னாடியே இந்த நாட்டினுடைய முத்தும், பவளமும், இந்த நாட்டினுடைய எலிமயிரினால் நெய்யப்பட்ட ஆடைகளையும் பொண்ணும் மணியும் ஏந்தி சீனத்து கடற்கரையில், ஈழத்து வீதிகளில், ரோமானிய புரத்து மாடமாளிகைகளிலே வியாபாரம் செய்தவர்கள். பெரிக்கோஸ் என்ற வரலாற்று ஆசிரியர் எழுதுகிறார். தமிழ்நாடு எல்லா முத்தும் பவளங்களையும் எடுத்தால் ரோமாபுரி வறண்டு போய்விடும் என்று எழுதினார்.

ஆக நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் நாகரிகம் படைத்தவர்கள் நாங்கள். எங்களுக்கு நாகரிகம் தெரியும். அண்ணன் யார், தம்பி யார், அக்கா யார் அண்ணியார் என்று. கொழுந்தனாக இருக்கிறவன் அன்னியின் முகத்தைக் கூட எட்டிப்பார்க்க மாட்டான். இது எங்கள் பண்பாடு. உங்கள் பண்பாடு என்ன? ஒருத்தியை ஐந்து பேர் கல்யாணம் செய்து கொள்வான். எங்களைப் பார்த்தா நாகரீகம் அற்றவர்கள் என்று சொல்கிறீர்கள். தமிழன் ஒரு நாளைக்கு இரண்டு வேளை குளிப்பான்.

### தமிழரின் அடையாளத்தை அழிப்பதே அவர்களின் நோக்கம்!

அவர்களுக்கு நாகரிகம் என்றால் என்னவென்று தெரியுமா? அதற்கு இலக்கணம் உண்டா? இலக்கியம் உண்டா? ஆகையினாலே இப்பொழுது நம் ஆட்சியை கைப்பற்றுவதல்ல அவர்கள் நோக்கம். தமிழ் கலாச்சாரத்தை அழிப்பது, தமிழன் என்கிற உணர்வை மங்க வைப்பது, பெரியாரை சமூக விரோதியாக காட்டு

வது, அண்ணாவை ஒரு சாதாரண மனிதனாக காட்டுவது. இந்த நாட்டிலே அண்ணா இல்லை, கலைஞர் இல்லை, எம்ஜிஆர் இல்லை இப்படிப்பட்ட பெருந்தலைவர்கள் எல்லாம் இல்லை. இந்த நேரம் பார்த்தால். தமிழ்நாட்டில் ஒரு சின்ன பையன். ஒற்றை உருவம். அவனால் எதிர் கொள்ள முடியாது என்று பேசி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு தெரியாது முத்துவேல் கருணாநிதியுடைய மகன் ஸ்டாலின். ஒற்றை நாடி உருவம் தான். ஆனால் வைரம் பாய்ந்த நெஞ்சம் கொண்டவர். நான் கலைஞரோடு 53 ஆண்டு காலம் அவர் மடியில் இருந்தவன். நான் அவரோடு பகல் இரவு என்று பாராமல் இருந்தவன். எனக்கு அந்த தலைவருடைய குணங்கள் தெரியும், அவருடைய வீரம் எனக்கு தெரியும், விவேகம் தெரியும். ஆனால் இவ்வளவு அறிந்திருக்கிற நான் சொல்கிறேன் அந்தத் தலைவரை நாங்களே சில நேரத்திலே கலாட்டா செய்து விடுவோம். அதை அவரே ஏற்றுக் கொள்வார். ஆனால் அவரையே அண்டர்ஸ்டாண்ட் பண்ணிய எனக்கு இந்த ஸ்டாலினை என்னால் அண்டர்ஸ்டாண்ட் பண்ண முடியவில்லை. என்னையே சில நேரத்தில் மயக்கி விடுகிறார். நான் கேட்பேன் தம்பி பந்தி போட்டுக்கிட்டு பண்றியா. எனக்கு தெரியாதுன்னு சொல்றியா அப்படின்னா.

“நான் என்னன்ன பண்றதுன்னு “ சொல்லிவிடுவார் ஆகையினால் அண்ணா, கலைஞர் இரண்டு பேரையும் ஊறவைத்து அரைச்சு ஒரு உருவம் பண்ணினால் அதுதான் மு.க.ஸ்டாலின். அவரை வந்து சின்னப் பையன் என்று சொல்லக்கூடாது.

### வைரம் பாய்ந்த நெஞ்சம் கொண்ட முதல்வர்!

கரிகாலன்பெருவெளத்தானை அப்படித்தான் சிறுவன் என்று சொல்கிறார்கள். பாராளுமன்றத்தில் வெற்றி சட்டமன்றத்தில் வெற்றி. எல்லா இடங்களிலும் வெற்றி...இடைத்தேர்தலில் வெற்றி. என்ன தைரியம் இருந்தால் அவர் 234 சட்டமன்ற உறுப்பினர்களில் 200 நமது என்கிறார். அதனால் 200 என்பதை ஜெயித்து சாதித்துக் காட்டுவார். சின்னப் பையன் இவனை எப்படியாவது ஏமாற்றி விடலாம் என்று நினைக்கிறார்கள்.

வடநாட்டினுடைய கலாச்சாரத்தை குறிப்பாக மொழியை அழிப்பது. மொழியை அழிந்தால் இனம் அழியும். அதனால் இந்தியை திணிக்க பார்க்கிறார்கள்.

அந்த காலத்திலேயே பட்டுக்கோட்டை அழகிரி சொல்வார். இந்தி எதிர்ப்பதில் எல்லோரும் செத்துப் போய், தாய் வயிற்றிலே இருக்கிற குழந்தை கூட இந்தி ஒழிக என்று. அந்த குழந்தையும் செத்துப் போனால் இந்த நாட்டிலே பிறக்கிற காகம் இந்தியை எதிர்க்கும். பருந்து இந்தியை எதிர்க்கும் என்று பட்டுக்கோட்டை அழகிரி ஒரு காலத்தில் உணர்ச்சி வசப்பட பேசுவார் என்று தலைவர் எங்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

### அதே கலைஞரின் தைரியம் முதல்வருக்கு உண்டு!

ஆகையினால் முதலிலே இந்தி காட்டி அழிப்பது. பயமுறுத்தி அழிப்பது,. மூன்றாவது எங்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல், கொடுக்க மாட்டேன் என்கிறது. கல்விக்கு கொடுக்க வேண்டிய பணம் கொடுக்கல .100 நாள் வேலை வாய்ப்புக்கு கொடுக்கிற பணம் கொடுக்கவில்லை. மற்ற பிற திட்டங்களுக்கு கொடுக்கக் கூடிய பணம் கொடுக்கவில்லை. ஆனால் இவ்வளவு பணத்தையும் கொடுக்க வில்லை என்றாலும் என்ன செய்வார் ஸ்டாலின். “ஐயோ எங்களை இப்படி பண்ணிட்டீங்களே அரசாங்கம் திண்

டாடுகிறது” என்று சொல்வார் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள், அப்படித்தானே. எனக்கு ஞாபகம் இருக்கிறது. கலைஞர் சொன்னார் ஒருமுறை இப்படித்தான் வறட்சிக்கு பணம் வாங்கி இருந்தோம். அப்போது சி சுப்பிரமணியன் சொன்னார். நிதியமைச்சர். அவர் ஒரு நாள் கருணாநிதியை கணக்கு கேட்பேன் என்று சொன்னார். திருப்பி கலைஞர் சொன்னார் நீங்கள் பைனான்ஸ் மினிஸ்டராக இருக்கிற வரையில் நான் உன்னிடம் பணம் கேட்க மாட்டேன். அதே தைரியம் எங்களுக்கும் உண்டு.

வேண்டுமானால் ஒன்றிய சர்க்கார் எல்லா பணத்தையும் நிறுத்தட்டும் அப்படியும் எங்களால் தமிழ்நாட்டிலே அரசாங்கம் நடத்த முடியும். ஆகையினால் மொழியை காட்டிப் பார்க்கிறார்கள். பணம் கொடுக்காமல் பயமுறுத்தி பார்க்கிறார் கள். தேர்தலிலே இவர்களை எப்படியாவது தோற்கடிக்க முடியாது என்று தெரிந்து யாரை பிடிக்கலாம் என்று இப்போது பார்க்கிறார்கள்.

இப்போது எழுதி வச்சுக்கோங்க பிஜேபி, அ.தி.மு.க ஓரணியில் இருப்பார்கள். இதுல இ.பி.எஸ். சொல்கிறார் ஓ.பி.எஸ்., சசிகலாவை சேர்க்க மாட்டேன் என்கிறார். அவர் கெட்டிக்காரர். இவங்கள சேர்த்தால் நான் ஒழிஞ்சேன்னு சொல்கிறார். இந்த ரெண்டு பேரையும் சேர்க்கதுக்கு இன்னொரு தூது குழு போய் இருக்காங்க நொண்டி, கூன், குருடு இவர்களைச் சேர்த்து எங்களை எதிர்க்க பார்க்கிறீர்கள் ஆனால் அவற்றையெல்லாம் நாங்கள் சமாளிக்க தயாராக இருக்கிறோம். இந்த மாவட்டத்தை பொறுத்தவரை என்றைக்கும் கழகத்திற்கு கோட்டையாக இருக்கக் கூடிய பகுதியாகும்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பகவிநாயகம், மாவட்ட பொருளாளர் சரவணன், துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் தேவதாஸ், சாகுல் ஹமீது, பராசக்தி, மகேஸ்வரி, மாரிச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பொன் முத்தையா பாண்டியன், கடற்கரை, பூசைபாண்டியன், சேர்மத்துரை கிறிஸ்டோபர், பெரியதுரை, ராமச்சந்திரன், வெள்ளத்துரை, பால்ராஜ், நகரச் செயலாளர்கள் அந்தோணிசாமி, பிரகாஷ், பேரூர் செயலாளர்கள் குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, சேது சுப்பிரமணியன், குருவிகுளம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் அவைத்தலைவர் ஜெயராமன், துணைச் செயலாளர்கள் கருப்பசாமி, ராஜேந்திரன், பொருளாளர் பாலமுருகன் மாவட்ட பிரதிநிதிகள் முத்தையா, ஆனந்தராஜ், அய்யாசாமி உள்பட சார்பு அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள். கிளைக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் ஒன்றிய துணைச் செயலாளர் தினேஷ் நன்றியுரை யாற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை குருவிகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளரும், நக்கலமுத்தன்பட்டி ஊராட்சி மன்ற தலைவருமான பி.குணசேகரன் செய்திருந்தார்.

சிவகங்கை மாவட்டம் – காளையார் கோயில் ஒன்றியத்தில்

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் - முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்!

## ‘அரசு பரிசீலிக்கும்’ என – சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



சென்னை, ஏப்.7-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பெரி. செந்தில்நாதன்:** சிவகங்கை, மாவட்டத்தினுடைய தலைநகரம் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் நிறைந்த இடம். அந்த இடத்திற்கு சட்டக் கல்லூரி கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யும்படி வேண்டுகிறேன்.

**அமைச்சர் எஸ். ரகுபதி:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகரிலே தலைவர் தளபதி அவர்களுடைய ஆட்சியிலே புதிதாக சட்டக் கல்லூரி வழங்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அழகப்பா பல்கலைக்கழக வளாகத்திலே சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. எனவே, சிவகங்கை நகருக்கு அருகிலேதான் காரைக்குடி இருக்கிறது. எனவே, புதிதாக அங்கேயே இன்னொரு சட்டக் கல்லூரி துவங்குவது என்பதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் கிடையாது.

**பெரி. செந்தில்நாதன்:** சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்திற்கு, காளையார்கோவில் ஒன்றியத்தில் நீதித் துறை நடுவர் நீதிமன்றமும், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் கொடுக்கப்பட வேண்டும். வழக்கறிஞர்கள் சேமநல நிதியை உயர்த்த வேண்டும்.

**அமைச்சர் எஸ். ரகுபதி:** காளையார்கோவிலைப் பொறுத்த வரைக்கும் உயர் நீதிமன்றத்திலிருந்து அரசுக்குப் பரிந்துரைகள் வந்திருக்குமேயானால், அதுகுறித்து முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வழக்கறிஞர்கள் சேமநல நிதி, அடுத்து வழக்கறிஞர்களுடைய எழுத்தர்களுடைய சேமநல நிதி இவையிரண்டும் உயர்த்தப்பட்டது. அது *Tamil Nadu Bar Council*னுடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் வழக்கறிஞர்களுடைய சேமநல நிதிக்கான அந்த முத்திரைக் கட்டணம் அதாவது 4 மடங்கு என்று சொல்கிறார்களே, அந்த *stamp* கட்டணம் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அரசாங்கமும் தர வேண்டும். அவர்களும் அதற்கான பங்கைத் தர வேண்டும். இடையிலே *Corona* காலத்திலே ஏராளமான வழக்கறிஞர்கள் மரணமடைந்துவிட்ட காரணத்தாலே அதையும் ஈடுசெய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் *Bar Council*னுடைய ஒப்புதலோடு அனைத்து வழக்கறிஞர் சங்கங்களுடைய ஒப்புதலோடுதான் இது நிச்சயமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில்

# தென் மாநிலங்களை வஞ்சிக்கிறது ஒன்றிய அரசு!

## சங்கரன்கோவிலில் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பேட்டி!



தென்காசி ஏப்.8–

ஒன்றிய அரசு தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சிக்க நினைக்கிறது. என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா சங்கரன்கோவிலில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் செய்தியாளர் களிடம் தெரிவித்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

ஒன்றிய பா.ஜ.க அரசு தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகை கணக்கீடு அடிப்படையில் தென் மாநிலங்களில் உள்ள நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை குறைக்க சூழ்ச்சி செய்கிறது. ஒன்றிய அரசின் தொகுதி மறுசீரமைப்பை தமிழ்நாடு திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அனைத்து கட்சி கூட்டத்தை நடத்தினார். இதில் பல்வேறு மாநிலங்களில் இருந்து 63 கட்சிகளில் 58 கட்சிப் பிரதிநிதிகள், பல்வேறு மாநில முதல மைச்சர்கள் பல்வேறு மாநிலங்களில் உள்ள அரசியல் கட்சியினர் கலந்து கொண்டனர்.

இதன் மூலம் இந்திய அரசின் தொகுதி மறுசீரமைப்பை அனுமதிக்க முடியாது என்ற என்பதை திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்து இதனை அனுமதிக்க கூடாது என்பதில் உறுதியாக உள்ளார். 1971 ம் ஆண்டு தொகுதி மறு சீரமைப்பு சட்டம் மக்கள் தொகை அடிப்படையில் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது தென் மாநிலங்களில் 23.41 சதவிகிதமும், வட மாநிலங் களில் 24.39 சதவிகிதமும் இருந்த மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி சீரமைக்கப்பட்டது. தொடர்ந்து இந்தியாவில் மக்கள் தொகை குறைப்பதற்கான ஒன்றிய அரசின் நடவடிக்கைகளில் தென் மாநிலங்கள் முறையாக பின்பற்றியதின் அடிப்படையில் தென் மாநிலங்களில் தற்போது 12. 59 சதவீதமாக குறைந்துள்ளது. ஆனால் வட மாநிலங்களில் மக்கள் தொகை உழைப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படாததால் இப்போது 21.83 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது ஒன்றிய அரசு தொகுதி மறு சீரமைப்பை கொண்டு வர முயற்சி செய்கின்றது. இதனால் தமிழ்நாட்டில் தற்போதைய இருக்கக்கூடிய 39 நாடாளுமன்ற தொகுதிகளில் 8 தொகுதிகள் குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது ஒன்றிய அரசு மாநிலங்கள் செலுத்தும் வரியின் மூலம் கிடைக்கும் வருவாயில் தமிழ்நாட்டிற்கு 100 ரூபாய்க்கு 29 ரூபாயும், கர்நாடகாவிற்கு 14 ரூபாயும் வழங்குகின்றது. ஆனால் 4 வட மாநிலங்களில் 100 ரூபாய்க்கு 425 ரூபாயும், தற்போது ஒன்றிய அரசு ஆட்சி செய்ய ஆதரவு குடுத்துள்ள பீகார் மாநிலத்திற்கு 100 ரூபாய்க்கு 922 ரூபாய் வழங்குகின்றது.

இது தென் மாநிலங்களை வஞ்சிக்கும் செயலாகும். தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய பேரிடர் மீட்பு நிதி, 100 நாள் வேலை திட்டத்திற்கான நிதி உள்ளிட்ட எந்த ஒரு நிதியும் ஒன்றிய அரசு முறையாக வழங்கவில்லை. தற்போது தொகுதி மறுசீரமைப்பு என்பது வரும் 25 ஆண்டுகளுக்கு தேவையில்லை என்பது எங்களுடைய கருத்தாகும்.

தற்போது நாடாளுமன்றத்தில் தமிழ்நாடு எம்.பிக்கள் மக்கள் பிரச்சினைகளுக் காக கேட்கும் கேள்விகளால் ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் செய்வது அறியாது திகைத்து வருகிறது. தென் மாநிலங்களில் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்வி அறிவோடு செல்வது அவர்களுக்கு பிடிக்கவில்லை. தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் வடமாநிலங்களுக்கு தொகுதிகளை அதிகமாக பிரித்து கொடுத்து, வட மாநிலங்களில் ஜெயித்தால் ஆட்சி அமைக்கலாம் என்று நினைப்பில் ஒன்றிய பா.ஜ.க.அரசு செயல்படுகிறது. இது ஒரு பொழுதும் நடக்காது.

100 நாள் வேலை திட்டத்திற்கு வேலைக்கு செல்பவர்களுக்கு செல்பவர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று பசியால் வாடக்கூடாது என்ற எண்ணத்தில் காலை உணவு திட்டத்தை முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ளார். இந்த திட்டம் இந்தியா மட்டுமல்ல உலக நாடுகளில் பல்வேறு இடங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டமாகும். தற்போது ஒன்றிய அரசு தொகுதி மறு சீரமைப்பை கொண்டு வரும் நிலையில் மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட சட்ட ஒழுங்கை காப்பாற்ற முடியாமல் ஒன்றிய அரசு திணறியது போல், தென் மாநிலங்களுக்கும் இதே நிலை ஏற்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பின் தான் தொகுதி மறுசீரமைப்பு செய்வார்கள் என கூற முடியாது. தற்போது எந்த ஒரு பிரச்சனையும் இல்லாத நிலையில் வக்பு வாரிய சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்துள்ளது. ஒன்றிய அரசின் சர்வாதிகார போக்கை காட்டுகிறது.

இந்தியாவில் வக்பு வாரியத்தால் எந்த ஒரு போராட்டமும், சட்ட ஒழுங்கு பாதிப்பும், நீதிமன்ற வழக்குகளும் எதுவும் இல்லாத நிலையில் அவசர அவசரமாக இரவு 8 மணிக்கு இந்த சட்டத்தை கொண்டு வர வேண்டிய நிலை இன்றைய பா.ஜ.க அரசுக்கு வந்துள்ளது. இது அவர்களின் மதம் சார்ந்த சிந்தனையை காட்டுகிறது. வக்பு வாரிய திருத்த சட்டத்திற்கு இந்தியாவில் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு ஆதரவு அளித்து வரும் மாநிலங்கள் தவிர மற்ற அனைத்து மாநிலங்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் வக்பு வாரிய சட்டத்திற்கு எதிராக 232 உறுப்பினர் கள் வாக்களித்துள்ளனர். பா.ஜ.க தமிழ்நாட்டில் எப்பொழுதும் வளர முடியாது என்பது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் ஜெயித்து தி.மு.க கூட்டணி கட்சியினர் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றிருப்பது இதற்கு ஒரு சான்றாகும். எனவே பொதுமக்கள் தொகுதி மறுசீரமைப்பை சீரமைப்பின் பாதிப்புகளை உணர வேண்டும். தொகுதி மறு சீரமைப்பால் தென் மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சியில் பெரும் வீழ்ச்சியை சந்திக்க நேரிடும். ஒன்றிய அரசின் இந்த முயற்சியை தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் தென் மாநிலங்களில் உள்ளவர்களை ஒருங்கிணைத்து இதற்கான எதிர்ப்பை வலியுறுத்தியுள்ளார்கள். தொகுதி மறுசீரமைப்பு ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப்படாது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தென்காசி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக

# பொறியாளர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில்!

தென்காசி.ஏப்.8-

தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், பொறியாளர் அணிக்கு அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் நிகழ்வு தலைமை கழகத்தின் அறிவுறுத்தலின்படி தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகம் சிவந்தி நகர் கலைஞர் அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் பொறியாளர் அணி மாவட்டத் தலைவர் தங்கப்பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செல்வகுமார் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாநில பொறியாளர் அணி துணை செயலாளரும் நெல்லை மண்டல பொறுப்பாளருமான ராஜவர்மன் பங்கேற்று நேர்காணல் நடத்தினார்.

நிகழ்வில் மாவட்ட பொறியாளர் அணி துணைத்தலைவர் இம்ரான்கான் துணைஅமைப்பாளர்கள் மணிகண்டன், பொன்தயா ஆனந்த், சிவராஜன் தலைமைச் செயற்குழுஉறுப்பினர் ஆறுமுகச்சாமி, தென்காசி நகர செயலாளர் சாதிர், ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம் திவான்ஒலி, ஜெயக்குமார், மகேஷ் மாயவன், கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ், பேரூர் கழக செயலாளர்கள் முத்தையா, ராஜன், தங்கப்பா மற்றும் அணி துணை அமைப்பாளர் கள் குட்டி (எ) சீதாராமன், ராமராஜ் மணிகண்டன், சுப்பிரமணியன் பொருளாளர் ஷேக்பரீத், மாவட்ட பிரதிநிதி வேல்சாமி இசக்கிமுத்து உள்பட பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவில் பொறியாளர் அணிதுணைஅமைப்பாளர் ஜாஹீர் உசேன் நன்றி கூறினார்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சார்பில் விருதுநகர் மாவட்டத்திற்கு 8 பேருந்துகள் ஒதுக்கப்பட்டு விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் கொடியை அசைத்து துவக்கி வைத்தார். உடன் அரசு போக்குவரத்துக் கழகப் பொதுச் செயலாளர் ராஜ செல்வம், தலைவர் பார்த்திபன், பொருளாளர் திருவேட்டை போத்தி, பொதுக் குழு உறுப்பினர்கள் ஆர்.பி. மதியழகன் சுதாகர், நகர் மன்றத் துணைத் தலைவர் துளசி ராமன், மின் கழக தொமுச அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.